**செ. கு. எண்**:326 **நாள்**:07.09.12

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 7.9.2012

சென்னை, மயிலாப்பூரைச் சேர்ந்த திரு. சாரங்கபாணி என்பவரின் மகன் திரு. பிரதீப்குமார் 4.9.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் அருகே சென்று கொண்டிருந்த போது மாநகர பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

துரைப்பாக்கம், பல்லவன் குடியிருப்பைச் சேர்ந்த திரு. மாணிக்கவேல் என்பவரின் மகன் திரு. தினேஷ்குமார் 4.9.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் தியாகராய நகர், உஸ்மான் சாலை அருகே சென்று கொண்டிருந்த போது மாநகர பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு. பிரதீப்குமார் மற்றும் திரு. தினேஷ்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் காலமான திரு. பிரதீப்குமார் மற்றும் திரு. தினேஷ்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**